முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 205/2014

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ம் நாள் இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரஞ்சித் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிச்சாமி | கிராமம் | : அங்கேரிபாளையம் |
| வயது | : 30 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 19-11-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. தற்போது எனக்கு என்ன வயது என்றால் 33 ஆகும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் வயது 30 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து எப்போது கிரயம் பெறப்பட்டது என்றால் 2001 ம் ஆண்டு. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 18.01.2002 ல் கிரயம் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தை கிரயம் பெற்றபோது எனக்கு வயது 7 என்றால் சரிதான். தாவாச் சொத்தை யாரார் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றார்கள், யாரார் அந்த இடத்தில் கட்டிடம் கட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

2. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் கிரயத்தின்போது எனக்கு வயது 7 என்பதால் வரவு செலவு விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. வரவு செலவுக்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி என் அப்பா என்றால் சரிதான். பிரதிவாதி என் சித்தப்பா என்றால் சரிதான். தாவாச் சொத்தை கிரயம் பெற்று கட்டிடம் கட்டி மெசின்கள் பொருத்துவதற்காக கத்தோலிக்கன் சிரியன் வங்கி அவினாசி கிளையில்

ஆவணங்களை அடமானம் வைத்து பணம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த அடமானப் பத்திரத்தில் வாதி, பிரதிவாதி கூட்டு உரிமையாளர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் வங்கி கடன் கொடுத்துள்ளது என்றால் சரியல்ல.

3. தாவாச் சொத்துக்கான குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு ஆகியவை வாதி பிரதிவாதி பெயரிலுள்ளது என்றால் சரிதான். என் அப்பா படித்துள்ளாரா என்றால் படித்துள்ளார். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். தாவாச் சொத்தில் உள்ள கம்பெனியில் வாதியும் பிரதிவாதியும் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. கம்பெனியின் மூலமாக வந்த லாபத் தொகையைத் தான் என் அப்பா வாடகை தொகையாக தாவாவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

4. தாவாச் சொத்தில் என் அப்பா வாடகைதாரர் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.437/2016 என்ற வழக்கு திருப்பூர் மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.437/2016 ல் என் அப்பா தரப்பில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.437/2016 தாவாவிலும் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. அ.வ.எண்.437/2016 தாவாவிற்கு பின்னிட்டு இந்த நீதிமன்றததில் ஆர்சிஓபி 15/2017 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆர்சிஓபி 15/2017 மனுவில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. தாவாவில் வாதி தான் பரிகாரம் கோர முடியும் வாதி தரப்பு சாட்சியான நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. வாதி என் அப்பா என்பதால் அவர் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் அப்படியே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.11.19 16:28:41 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.